MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்



ஏப்ரல் 2022




## இந்தப் பதிப்பில்:


குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான முக்கிய அறிவிப்புகள் மற்றும் அடிப்படை பராமரிப்புத் திட்டம்

டெங்கி நோய்க்கு எதிராக உங்களைப் பாதுகாத்திடுங்கள்!

தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்கள்

# முக்கிய அறிவிப்புகள்





## மாற்றம் செய்யப்பட்ட பாதுகாப்பு நிர்வாக நடைமுறைகள் (26 ஏப்ரல் 2022 முதல்)


- குழு அளவிற்கு வரம்பு கிடையாது மற்றும் பாதுகாப்பான தூர இடைவெளி தேவையில்லை
- அனைத்து உட்புற இடங்களிலும் முகக் கவசம் தொடர்ந்து அணிய வேண்டும். வெளிப்புறங்களில் முகக் கவசம் அணிவது உங்கள் விருப்பத்தைப் பொருத்தது.
- அதிக ஆபத்துள்ள இடங்கள் (எ.கா. எந்தவோர் நேரத்திலும் 500க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கூடுவது) மற்றும் உணவு பானக் கடைகளைத் தவிர்த்து, தடுப்பூசி போட்டுக்கொள்ளாதோருக்கான வேறுபடுத்தப்பட்ட பாதுகாப்பு நிர்வாக நடைமுறைகள் நீக்கப்படும்


## முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்ட மற்றும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத/ஓரளவு மட்டும் தடுப்பூசி போட்டுக்கொண்ட ஊழியர்கள் சமூக இடங்கள் மற்றும் பொழுதுபோக்கு நிலையங்களுக்குச் செல்லுதல்

- அனைத்து ஊழியர்களும் சமூக இடங்களுக்குச் செல்ல எக்ஸிட் பாஸுக்கு விண்ணப்பிக்கலாம்
- அனைத்து ஊழியர்களும் எக்ஸிட் பாஸ் இல்லாமல் பொழுதுபோக்கு நிலையத்திற்குச் செல்லலாம்

## வேலை அனுமதி சீட்டு தொடர்பிலான விசாரணைகளுக்கான இணைய வாசல்

வேலை அனுமதி விண்ணப்பத்தின் நிலையை அல்லது ஏற்கனவே உள்ள வேலை அனுமதிச் சீட்டின் செல்லுபடி தன்மையைச் சரிபார்க்க, வேலை அனுமதி விசாரணைக்கான புதிய இணைய வாசலை நீங்கள் இப்போது பயன்படுத்தலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்கள் பிறந்த தேதி மற்றும் FIN/பாஸ்போர்ட் எண்ணை உள்ளிடுவதுதான். இப்போதே முயற்சி செய்து பார்க்கவும்!



# பொழுதுபோக்கு நிலையங்களில் அடிப்படை பராமரிப்புத் திட்டம் குறித்த பேச்சுக்கள்



**ஏப்ரல் 1, 2022 முதல்,**

கட்டுமானம், கடற் கப்பல் பட்டறை அல்லது பெட்ரோலிய ரசாயனத் (சிஎம்பி) துறைகளில் வேலை செய்யும் அல்லது தங்குவிடுதிகளில் வசிக்கும் வெர்க் பர்மிட் அல்லது எஸ் பாஸ் வைத்திருப்பவர்களுக்கு அடிப்படை பராமரிப்புத் திட்டத்தை (பிசிபி) முதலாளிகள் வாங்க வேண்டும்.

பிசிபி திட்டம் உங்களது பெரும்பாலான ஆரம்ப சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

**பிசிபி திட்டம் பற்றி மேலும் அறிய, அதற்கென நடத்தப்படும் பேச்சுகள் ஒன்றில் எங்களுடன் கலந்துக்கொள்ளுங்கள்!**

| தேதி | இடம் |
|---|---|
| 8 மே 2022 | கொக்ரேன் ஆர்சி |
| 22 மே 2022 | பென்ஜூரு ஆர்சி |
| 5 ஜூன் 2022 | சுன் லீ ஆர்சி |



## உங்களில் சிலர் கேட்ட கேள்விகள்...

**"வெளிநோயாளி வருகைக்கு நான் தற்போது கட்டணம் ஏன் இணைந்து செலுத்த வேண்டும்?"**

பதில்: சிங்கப்பூரின் சுகாதாரப் பராமரிப்பு அணுகுமுறையில் தனிப்பட்ட பொறுப்பு ஒரு முக்கியக் கூறாகும். இணை-கட்டணம் இதில் ஓர் அம்சமாகும். உங்களது பிசிபி திட்டத்திற்குப் பணம் செலுத்துவது உங்கள் முதலாளியின் முதன்மைப் பொறுப்பாகும். ஆயினும், தனிப்பட்ட பொறுப்பை உறுதி செய்யும் பொருட்டு, மருத்துவ நிலையத்தில் ஒவ்வொரு வருகையின்போதும் அல்லது தொலைதொடர்பு மருத்துவ ஆலோசனை பெறும்போதும் சிறு அளவிலான இணை-கட்டணத் தொகையை நீங்கள் செலுத்த வேண்டும்.

**"சம்பளம் தாமதமாக கிடைத்தால் மருத்துவக் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை என்றால் நான் என்ன செய்வது?"**

பதில்: நீங்கள் தொடர்ந்து மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெற வேண்டும். சம்பளப் பிரச்சனைகளை ஏஸ் அதிகாரிகளிடம் விரைவாகத் தெரிவிக்கவும்.

**"பிசிபி திட்டத்தில் பல் சிகிச்சை அடங்குமா?"**

பதில்: இல்லை. ஆயினும், சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணரால் அவசியமெனக் கருதப்படும் பல் சிகிச்சைக்கான உங்களது கட்டணங்களைச் செலுத்த வேண்டியது உங்கள் முதலாளியின் பொறுப்பாகும்.



பிசிபி திட்டத்தைப் பற்றி மேலும் அறிய இங்குள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

https://go.gov.sg/pcp-ebooklet

# டெங்கி நோய்க்கு எதிராக உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும்!





கொள்கலன்கள், பானைகள் மற்றும் வாளிகளைக் கவிழ்த்து வைப்பவதன் மூலம் தேங்கி நிற்கும் தண்ணீரை அகற்றவும்



பயன்படுத்தப்படாத கொள்கலன்கள், பழைய தலைக்கவசங்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பூட்ஸ் காலணி போன்ற தேவையற்ற பொருட்களை அகற்றவும்



கேன்வஸ் தாள்களில் இருக்கும் உபரி நீரை அகற்றவும். பயன்படுத்தாதபோது இவற்றை ஒழுங்காக வைத்திருக்கவும்



உங்கள் அறையின் இருண்ட மூலைகளில் பூச்சிக்கொல்லியைத் தெளிக்கவும்




கொசு விரட்டியைப் பயன்படுத்தவும். மற்றும் முடிந்தவரை உடலை முழுதும் மூடுகிற ஆடைகளை அணியயவும்

உங்களுக்கு உதவ நாங்கள் இருக்கிறோம். டெங்கியிலிருந்து உங்களை எவ்வாறு பாதுகாத்திடுவது என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு, NEA இணையதளத்தைப் பார்க்கவும்



## நமது குடிபெயர்ந்த ஊழியர்களுக்கு ஒரு செய்தி

இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்த ஊழியர் திரு விஜயபாலுவைச் சந்திக்கலாம். அவர் கொக்ரேன் பொழுதுபோக்கு நிலையத்தில் நடந்த கபடி போட்டியில் வென்றவர். அவர் நம்முடன் இதனைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்:

15 ஆண்டுகளுக்கு முன்பு எனது தந்தை இந்த விளையாட்டை எனக்கு அறிமுகப்படுத்தினார். எனது ஊரில், இந்த விளையாட்டு மிகவும் பிரபலமானது. எல்லோரும் இதில் விளையாட விருப்பப்படுவார்கள். ஒவ்வொரு ஞாயிறு அல்லது பொது விடுமுறை நாளிலும் காமன்வெல்த் எம்ஆர்டி நிலையத்திற்கு அருகிலுள்ள திறந்தவெளியில் மாலை 5.30-6 மணிக்கு விளையாடுவோம். உங்களுக்கு ஆர்வம் இருந்தால், எங்களுடன் சேர்ந்து விளையாடவும்.

*சிங்கப்பூரில் உங்கள் வாழ்க்கையைப் பற்றி பகிர்ந்து கொள்ள சுவாரஸ்யமானத் தகவல் ஏதும் உங்களிடம் உள்ளதா? இந்த இணைப்பைக் கிளிக் செய்து அதனை எங்களுக்குத் தெரிவிக்கவும்*

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்




## தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்கள்

பல்வேறு தங்குவிடுதிகளில் இருக்கும் குடிபெயர்ந்த ஊழியர்கள் வெளியிடங்களுக்குச் செல்ல, 18 படிகளை, ஏஸ் குழு அரசு சாரா அமைப்புகளுடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்தது. இந்த ஊழியர்களுக்கு ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோவிலில் பாரம்பரிய சைவ உணவு உபசரிப்பு நடந்தது. மற்றும் இந்திய பாரம்பரிய நிலையத்திற்குக் குழு சுற்றுப்பயணத்திலும் இவர்கள் பங்கேற்றனர்.
இப் பயணத்தை ஏற்பாடு செய்த எங்கள் ஏஸ் அதிகாரிகள் மற்றும் 18 படிகளுக்கும் நன்றி!



## காலாங் போல் சுற்றுலா

பல்வேறு தங்குவிடுதிகளில் உள்ள குடிபெயர்ந்த ஊழியர்கள், அவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட கேளிக்கை உருட்டுப் பந்து விளையாட்டில் கலந்துக்கொள்ள காலாங் போலுக்குச் சுற்றுலா சென்றனர்!

நாள் முழுவதுமான கேளிக்கைக்கு நமது குடிபெயர்ந்த ஊழியர்களை அழைத்துச் சென்ற எங்கள் ்.பாஸ்ட் அதிகாரிகளுக்கு நன்றி!





## கொக்ரேன் ஆர்சியில் (சிஆர்சி) கபடி விளையாட்டு போட்டி

மார்ச் 17, 2022 அன்று, CRCயில் ஓர் உற்சாகமான கபடி போட்டி நடந்தது. அதில் பல குடிபெயர்ந்த ஊழியர் குழுவினர் ஒருவரையொருவர் எதிர்த்து விளையாடி, வெற்றி கோப்பை மற்றும் மற்ற பரிசுகளை வென்றனர்.

எங்கள் குடிபெயர்ந்த ஊழியர்களுக்காக இந்தப் போட்டியை ஏற்பாடு செய்த AGWO எனப்படும் விருந்தினர் ஊழியர் அமைப்பு மற்றும் கபடி விளையாட்டு அமைப்பு ஆகியவற்றுக்கு மிக்க நன்றி!





நீங்கள் பங்கேற்க பல்வேறு நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப் பற்றி மேலும் அறிய இங்கே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

*அண்மைய செய்திகள் மற்றும் மாற்றங்களைப் பற்றி தகவல் பெற எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

- மனிதவள அமைச்சின் முகநூல் பக்கம்
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் இணையத்தளம்